செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 15

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

[இல-சுக புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரணஞு தை மீ உஉ வெள்ளிக்கிழமை (15-1-1971)

# ஸ்ரீ பாம்பன் சுவாமிகளுக்கு

## அநுக்கிரகம் புரிந்த முருகப் பெருமானுக்கொரு ஆலயம்

## ஸ்ரீ மயூரப்பெருமான் - பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தெய்வத்தானம் மகா கும்பாபிஷேகம்

ஸ்ரீ மாயூரப்பெருமான் திருக்கோயில்
(இராமநாதபுரம் தாலுக்கா — பிரப்பன்வலசை)

சண்முக கவசம் என்ற மகா மந்திரசக்தி வாய்ந்த நூலையும், ஸ்ரீ முருகப்பெருமான் மீது 6666 திந்தமிழ்ப் பாடல்களையும் பல சாத்திரங்களையும் வியாசங்களையும் அருளிச் செய்த பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் குமாரப் பெருமானுடைய அருளுபதேசம் கேட்டு 35 நாட்கள் அருந்தவமியற்றிய பெருமையும் அறுமுகப் பரமன் அடியிணைமலர் அவனிதோயவந்து அச் சுவாமிகட்கு அருளியதுமான பிரப்பன்வலசையென்னுந் திருப்பதியில் தவபூமியில் ஸ்ரீ மயூரப்பெருமான் - பாம்பன் ஸ்ரீமத். குமரகுருபரதாச சுவாமிகள் தெய்வத்தானம் எனுந் திருக்கோயில் எழிலுற எடுக்கப்பட்டுள்ளது ஷெ கோயில் கும்பாபிஷேகம். சாதாரண ஆண்டு தைத்திங்கள் 18 ஆம் நாள் (31-1-71) ஞாயிற்றுக்கிழமை நிகழும்.

28-1-71 வியாழக்கிழமை காலை 7-30 மணி அனுஞ்ஞை விக்கினேசுவர பூசை
29-1-71 வெள்ளிக்கிழமை காலை 8 மணி யாகபூசை
30-1-71 சனிக்கிழமை காலை 8 மணி யாகபூசை
31-1-71 ஞாயிற்றுக்கிழமை 8-30 மணி முதல் 10 மணிக்கு மகா கும்பாபிஷேகம்

ஸ்ரீலஸ்ரீ மதுரைத் திருஞானசம்பந்தராதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் மலர் வெளியிடுதலும், விரிவுரைகளும் நடைபெறும்.

பாம்பன் ஸ்ரீமத். குமாருருதாச சுவாமிகள்

ஓங்காரத் துள்ளொளியே யவ்வொளியினுள் ளுருவே
சங்கெம தாங்காரமதை யிரித்தருளுஞ் சற்குருவே
நீங்கா தெங்கிலே தனிலும் கினையுன்ன அருள்வாயே
பாங்கான குமரகுரு தாசரெனும் பரமகுருவே.

## சரணாலய சுகந் தருவாய்!

இராகம்: மோகனம் :: தாளம்: ரூபகம்

பல்லவி

மனக் கோயிலில் குடியிருக்கும்
மனோன் மணித் தாயே — அன்பர் (ம)

அநுபல்லவி

நினைத்த போது நிகரிலாத
இனித்த காட்சி எழும்சிங் கார (ம)

சரணம்

மர கத வல்லி வரத சுந்தரி
பர மேஸ்வரி பால கௌரி
சரணா லய சுகமே — நீ
தருவாய் - கற் பகமே — என். (ம)

—அளவையூர். "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

## திரு. அருணாசல உபாத்தியாயர் நினைவு நாள்

காரைநகர்ச் சைவமகாசபை ஆதரவில் 17-1-71 ஞாயிற்றுக்கிழமை மேற்படி தினம் பி. ப. 4 மணிக்கு சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் திரு. மு. கு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில கொண்டாடப்பெறும்,

நிகழ்ச்சிகள்:- 1. திரு சு. கா. சுப்பிரமணியம் அவர்கள் குமிழமுனை ஒழுங்கைக்கு அருணாசல உபாத்தியாயர் வீதி என்ற பெயர்பொறித்த அணை நாட்டுவார்.
2 மாணவரொருவரின் ஞாபகச் சொற்பொழிவு.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சூடினர் கங்கை யாளைச்;
சூடிய துழனி கேட்டங்
கூடினள் நங்கை யாளும்;
ஊடலை யொழிக்க வேண்டிப்
பாடினர் சாம வேதம்;
பாடிய பாணி யாலே
ஆடினர் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## தேவ சன்னிதானத்தில் இருக்கிறோம்

உனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நாங்களெல்லாம் தேவ சன்னிதானத்தில் இருக்கிறோம். இது ஒரு பெரும் சத்தியம் யாவும் இருந்தபடியே நடந்து வருகின்றது கிலேசமோ, அன்போ, பகையோ இவையாவும் பகவானுடைய விளையாட்டு. இவை என்றும் இப்படியே நாமும் அப்படியே. பிறப்பைப் போல இறப்பு. புகழைப்போல இகழ். நன்மையைப் போலத் தீமை. முழுதும் உண்மை முன்னிலையின்றித் தன்னிலையில் யாவும், இயங்காமல் இயங்கு. முடிவைக் காணோம்.

— சுவாமி திருமுகம்
(சிவ தொண்டன்)

## ஸ்ரீ-ல-ஸ்ரீ தம்பிரான் சுவாமிகள்

கல்லை: ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான்சுவாமிகள் 22-1-71 பாரதநாட்டில் மைசூர் மாநில மக்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு ஆங்கு சமயப்பிரசார செய்தற்காகச் செல்லவிருக்கிறார்கள்

## வடமாகாணத்தில் பல்கலைக்கழகம்

தைமாதம் முடிவதற்கு முன் வடமாகாணத்தில் பல்கலைக் கழகம் அமைக்கக்கூடிய அடிப்படை முயற்சிகள் கையாளப்படுமென கௌரவ தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியரவர்கள் ஒருசெய்தி வெளியிட்டிருக்கிறார்.

## நெல் சேகரிப்பு நிலையம்

50,000 புசல் நெல் கொள்ளவு செய்யக்கூடிய நவீன வசதிகள்கொண்ட நெல் சேகரிப்பு நிலையம் ஒன்று ராஜவன்னி பிரதேசத்திலுள்ள 'தப்போவ" என்னும் இடத்தில் தற்போது நிறுவப்பட்டு வருகின்றது.

## தக்ஷிண கைலாச மான்மியம்

["சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி]

(முன் வளர்ச்சி — 4)

10-வது கதிர்காமகிரி மகிமையுரைத்த படலம்

கதிர்காமகிரி மான்மியம் கேட்டோர் வரலாறு

ஆதியிலே கதிர்காம கிரியின் மான்மியத்தை திருக்கைலாசமலையில் சிவபெருமான் உமாதேவியாருக்கும் பின் திருநந்திதேவருக்கும் பிரம விட்டுணுக்களுக்கும் உபதேசித்தார். விட்டுணுவால் ஆதிசேடனுக்கும், கருடனுக்கும், பிரமாவால் இந்திரனுக்கும், குமாரசுவாமியினால் வள்ளியம்மையாருக்கும் தெய்வதயானை அம்மையாருக்கும் அகத்திய முனிவருக்கும், திருநந்திதேவரால் சனற்குமார முனிவருக்கும், சனற்குமாரர் வியாசமுனிக்கும், அவரால் சூதமுனிவருக்கும், சூத முனிவரால் நைமிசாரணிய முனிவர்களுக்கும் உபதேசிக்கப்பட்டது. இவ்வாறு கதிர்காம மான்மியம் பரமசிவனாலும், தேவர்களாலும், முனிவர்களாலும் உபதேசிக்கப்பட்டு பாரம்பரியமாக முனிவரால் மனிதருக்கும் உபதேசிக்கப்பட்டது.

கதிர்காமகிரி மகிமை

கைலாசம் மந்தரம், மேரு, கந்தமாதனம் இமயம், கதிர்காமம் என்றும் இம் மலைகள் பெருமையினாலே தம்முள் சமமாய் விளங்கும் உத்தம புண்ணிய மலைகளாம். பிள்ளையார் மலை, வீரவாகு மலை, வள்ளி மலை, தெய்வதயானை அம்மை மலை முதலிய மலைகளின் நடுவே சூரியன்; சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களின ஒளிபோன்று சர்வலோகங்களுக்கும், ஞான ஒளியாய்ப் பிரகாசிப்பது கதிர்காமமலையேயாம, இம்மலை சர்வசங்கார காலத்திலும் அழியாதிருப்பது அறுமுகக் கடவுளின் திருமேனியாய் விளங்கா நிற்கும்.

கதிர்காம மலையில் குமாரசுவாமியினுடைய ஆனந்த தாண்டவ தரிசனம்

கதிர்காம மலைச் சிகரத்தில் அனேககோடி சூரியப் பிரகாசமாய் விளங்கும் சிந்தாமணி ஆலயத்லே நவரத்தினமயமான சிங்காசனத்தின்மேல் வள்ளி தெய்வதயானை அம்மைமார் சமேதரராய் கதிர்காம கிரீசர் எழுந்தருளி இருக்கின்றார். அம்மலையிலே விநாயகரும் அவர் கணங்களும், ஐயனாரும் அவர் கணங்களும், வீரபத்திரரும் அவர் கணங்களும், வைரவரும் அவர் கணங்களும, காலாக் கினிருத்திரரும் அவர் கணங்களும், வீரவாகுவும் அவர் கணங்களும், பிரமா, விஷ்ணு, உருத்திரன், சரஸ்வதி, இலக்குமி, உமை இந்திரன், இந்திராணி அட்டவசுக்கள், மருத்துவர் இருவர், நட்சத்திரங்கள, கிரகங்கள், கந்தருவர், அரம்பையர், சித்தர், சப்த கன்னிகையர், சனை, விசனை. வசிட்டர், மார்க்கண்டேயர், பிருங்கி ததீசி, கௌதமர், காசிபர், கௌசிபர், பாரத்துவாசர், அகத்தியர் முதலிய யோகியர்கள், நவசித்தர் முதலிய யாவரும தினந்தோறும் குமாரசுவாமி ஆடுகின்ற அனந்ததாண்ட தரிசனம் செய்து ஆனந்தக கடலில ஆழ்ந்து கசிந்துருகும் உள்ளத்தராய், மெய்யன்போடு அங்கே வசிக்கின்றார்கள். (வளரும்)

## புதிய மகா வித்தியாலயங்கள்

வல்வெட்டித்துறை சைவத் தமிழ் வித்தியாசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, கப்புதூ சைவத்தமிழ வித்தியாசாலை ஆகியன மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்தப்பெற்றுள்ளன. இப் பாடசாலைகளில் முதலாம் வகுப்புத்தொடக்கம் பத்தாவது வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பெறும்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# வரதக்ஷிணையால் விளையும் இன்னல்கள்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சாதாரண ஞு தைமீ உ-உ வெள்ளிக்கிழமை [1971]

## மகாதேசாதிபதிக்கு வரவேற்பு

16-1-71 சனிக்கிழமை மகாதேசாதிபதி கௌரவ. திரு. வில்லியம் கோபல்லாவ அவர்கள் விமான மூலம் யாழ்ப்பாணம் வருகின்றார்கள். அப்பொழுது அவருக்கு யாழ்ப்பாண மக்கள் சிறப்பான வரவேற்பளிப்பார்கள். இலங்கை சுதந்திரமடைந்த பின்பு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் முதற்றேசாதிபதியிவரே. லக்சபான மின்சாரத் தொடர்பை முதன் முதல் இவர் வருகையிலன்று ஆரம்பித்து வைப்பார்.

வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், உரும்பராய், கோண்டாவில், திருநெல்வேலி, அரியாலை சப்பல் வீதி முதலிய இடங்களிலும் வரவேற்பளிக்க ஒழுங்குகள் நிகழுகின்றன.

நாட்டின் அரசாங்கத் தலைவராக விளங்குகின்ற தேசாதிபதியவர்களை ஒரு அரசனாக மதிப்பதே எங்கள் மரபு. எல்லா மக்களையும் ஈழ நாட்டின் மக்களாகக் கருதி காய்தல் உவத்தலின்றி சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் மக்களுக்கு நீதி வழங்கும் கீழைத் தேச மரபை எங்கள் தேசாதிபதி அவர்கள் பின்பற்ற இறைவன் துணை புரிவாராக. இவருக்கு நல்வரவு கூறிகின்றோம்.

## பழைய கலைகளைக் காப்பாற்றல் வேண்டும்

சென்னையிலிருந்து வெளிவரும் 8-1-71 இந்துப் பத்திரிகையில் இசைக்கருவி உற்பத்திக்குப் பிரசித்தி பெற்ற தஞ்சாவூர் ஜில்லாவில் இப்பொழுது இசைக் கருவி உற்பத்தி குறைந்து வருவதாகவும், நாட்டில் இசைக் கலைஞர்கள் தொகை அருகிவருவதும் முற்காலத்தில் அவர்களை ஆதரித்த அரசரைப் போல இக்காலம் அவர்களை ஆதரிப்பாரில்லாமையினுல் அவர்கள் தொகை குறைந்து வருவதாகவும், இப்பொழுது அங்கு இருபது பேர் தான் அத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்களுள்ளும் 75 விதமானவர்கள் வயோதிபராகிவிட்டார்களெனவும் இளஞ்சந்ததியினர் அத் தொழிலில் ஈடுபடவிருப்பமுடையவர்களாகக் காணப்படவில்லையெனவும் போன்ற செய்தியை ஒரு நிருபர் தெரிவித்துள்ளனர். நமது நாட்டில் சிறந்த சிற்பவேலை, வெள்ளி, பொன் வேலைகள், மரத்தொழில் வேலைகள் செய்யக்கூடிய தொழிலாளிகள் இருக்கின்றார்கள். அவ்வேலைகளைச் செய்யும் தொழிலாளர் தொகையும் மிகக் குறைந்து விட்டது. இங்கும் முதியோர்கள் அத்தொழில்களைச் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாயிருக்கின்றனர். இளஞ் சந்ததியினர் அத் தொழில்களில் ஈடுபடுவதை விரும்புகின்றார்களில்லை.

நாட்டிலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் போல அவர்களும் பாடசாலைகளில் கல்வி கற்று அரசாங்கத்தில் உத்தியோகம் பெறும் நோக்கத்தையே மற்றைய பிள்ளைகளைப் போல மேற்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். அவர்கள் தங்கள் முன்னோர்களுடைய தொழிலில் ஈடுபட்டு நாட்டின் செல்வத்தைப் பெருக்கலாம். வேலையற்றிருப்பதே இழிவு. அவர்களுடைய முன்னோருடைய தொழில் ஒருபொழுதும் இழிவானதல்ல. இங்குக் குறித்த தொழிலாளர்களுடைய பிள்ளைகளைப்போலவே சைவ சமயக் குருமார்களுடைய பிள்ளைகளும் தங்கள் முன்னோருடைய குருத்துவத்தைக் கைவிட்டு மற்றைய பிள்ளைகளைப்போல உத்தியோகம் தேடுவதில் காலங் கழிக்கின்றார்கள். தெய்வீகமான இக்கலைகளை விருத்தி செய்வதற்கு உதவியாகவும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவும் கலைச் செல்வம் வளரவும் இங்குக் குறித்த கலைப் பகுதிக்குரிய மக்கள் இளஞ் சந்ததியாரை அவற்றில் ஈடுபடச் செய்தல் நன்று. நாட்டில் செல்வம் பெருகும். அறிவு வளரும்.

## வரதக்ஷிணையால் விளையும் இன்னல்கள்

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

இக்காலத்தில் மனித வர்க்கத்துக்கு உண்டாகின்ற இலட்சக் கணக்கான தீமைகளுள் மிகவும் பயங்கரத்தைச் செய்யக்கூடியதும், ஒழுக்கத்தைக் கெடச் செய்வதுமான ஒரு தீமை தோன்றி வளர்ந்து வருகிறது. எங்களுக்கிடையில் அத்தீமை வரதட்சணை எனும் கொடிய சர்ப்பமாகும். புத்திரர்களை மாத்திரம் பெற்ற-செல்வர்களும் வறியவர்களும் புத்திரிகளைப் பெற்றிருக்கிற பெற்றோர்களிடமிருந்து அவர்களிருக்கிற நிலைபரங்களையும்- அவற்றின் தன்மைகளையும் உற்றுநோக்காது அவர்களிடமிருந்து- எங்கள் புத்திரர்களை உங்கள் புத்திரிகளுக்கு மாப்பிளைமார்களாகத் தருதற்குப், பெருந்தொகையான (காசை) பணத்தைத் தரவேண்டுமென்று வெட்கக்கேடாய் அபகரிக்க விரும்புகிறார்கள். பல, பெண்கன்வீட்டில் இப்படியே பணத்தை- வரதட்சணை) என்று அபகரித்து வருகிறார்கள். இந்தியாவிலும் இப்படியே செய்து வருகிறார்கள். அங்கே ஸ்மிருதிகள் என்று சொல்லப்படும் நூல்களில் விதிக்கப்பட்ட கட்டளைப்படி பெண் பிள்ளைகளை ருதுவாகிறதற்கு முன்பே(கன்னியா Sulka சல்கம்) என்ற வழக்கப்படி பணம் பெற்று மணஞ்செய்தல் தாழ்ந்த சனசமூகத்தினரிடையில் நிகழ்ந்து வந்தபோதிலும் அது ஒரு தீமையான பழக்கம் என்று அக்காலத்திலேயே சொல்லியிருந்திருக்கிறார்கள். இப்போது மாப்பிள்ளைமார் வரதட்சணை என்று கேட்டு வாங்கும் தீமையானபணம் கன்னியா சல்கத் தீமையிலும் கொடுமையாயிருக்கிறது.

விவாகம்-என்பது சீவிய பரியந்தம் வரையும் நிலைத்திருக்கும்; ஒரு தெய்வ உறவு ஒருவரையொருவர் விட்டு நீங்காததுமான ஒரு உடன்பாடேயாகும். விவாகமாகிய இந்தப் பொருத்தம் விவாகஞ் செய்த பின்புதான் நிலையானதும், முக்கியமானதுமாகிய கடமைகளைச் செய்ய வேண்டியிருப்பதால்-அக் கடமைகளை நிறைவேற்றுதற்கு எல்லா ஒழுக்கங்களையும் விதிகளையும் இருவரும் கருத்தொத்துச் செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்தற்கே உரியதாயிருத்தலினுல் பொருளாசையினுல் செய்யப்படும் பொருத்தம் விவாகத்தின் சிறந்த நோக்கங்களைச் செய்ய விடாது. இரு பகுதியாரையும் குருடர்களாகச் செய்து விடுகின்றது. பணம் வாங்கிக்கொண்டு செய்யும் அசுத்தமான-வெட்கத்துக்குக் காரணமான இந்தப் பொருத்தம் விவாகத்தால் உண்டாகும் எல்லாவிதமான தொடர்புகளையும், அறங்களையும் சிதைத்துவிடும். அப்படியே சில இடங்களில் நிகழ்ந்துமிருக்கிறது.

பரிசம் கொடுத்தல் என்பது, விவாகச் சடங்கு நிகழும் நேரத்தில் மணவாளன் மணவாட்டிக்குக் கொடுக்கும் நன்கொடை (சந்தோஷ யம்) ஆகும்.

கணவன் தன்மனைவியைப் பாதுகாத்தல், அவன் மேல் பொறுத்த பெருங் கடமையாகும். இந்தக் கடமையை எல்லாத் தேசத்தாரும், எல்லாச் சாதியாரும் (நாகரீகமுள்ளவர்கள், நாகரீகமற்றவர்கள்) ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இதைக்குறித்து எந்த மனிதனும் மறுத்துப் பேச மாட்டான். பிரசித்தமான, எல்லோருக்கும் பொதுவான வழக்கம் யாதெனில், மணவாளன் மணவாட்டிக்கு. விலையுள்ள ஆபரணங்களும் சேலைகளும் அல்லது கொஞ்சப்பணமும் தன் பெற்றோர்களாற்றரப்பட்டதை வாங்கிக் கொடுத்தலாம்.

சில வருஷங்களுக்கு முன் உள்ள காலங்களில், மணவாளன் நிமித்தம், பெண் பெற்றோரிடம் எதையும் கேட்டு வாங்குவது, அவமானமுள்ள காரியமாய் எண்ணப்பட்டது. கணவன் என்று சொல்லப்படுபவன் எவனோ, அவன் தன்மனைவியைப் பல நிலையிலும் பாதுகாத்தல் கடமையாகும். அவளைப் பராமரித்தற்கு, அல்லது அவளுடைய பாவிப்புக்குத் தானும், அவளுடைய பெற்றோர்களிடமிருந்து சீதனந்தானும் கேட்குதல் ஆதிகாலந் தொடங்கி ஒவ்வாத செயலாயிருந்திருக்கின்றது ஆனால் இக்காலத்தில் மாப்பிளைமார் கேட்கிற பெருந்தொகை வரதக்ஷிணைப் பணம் மணவாட்டியின் உபயோகத்துக்கு மாத்திரந் தானென்று கேட்கில் அதனைக் கொடுப்பதற்கு மறுப்பில்லை. ஆனால், இப்போது வரதட்சணை கேட்கிற மாப்பிளைமாரில் 100க்குத் 99பேர்களும், அப்பணம் தங்களுக்கு அல்லது தங்கள் குடும்பத்திற்கே என்கிறார்கள்.

ஒரு பிதாவானவன் தனது மகளை மணவாளனுக்குக் கொடுப்பதற்கு- தான்பட்ட கடனைத் தீர்த்துவிட வேண்டுமென்றும், இன்னொருவன் தன் மகனது படிப்பிற்குச்

( வளர்ச்சி 3- ஆம் பக்கம் )

நேயர் நெஞ்சம்

## யாழ்ப்பாணம் திருமதி மங்களம்மாள் மாசிலாமணி

### ஈழத்து அன்னை கஸ்தூரிபாய்

ஐயா,

சில வாரங்களுக்குமுன் வெளிவந்த இந்துசாதனம் மூலம்" யாழ்ப்பாணம் திருமதி. மங்களம்மாள் மாசிலாமணி அவர்கள் இறைவனடி நண்ணிவிட்டார் என்ற செய்தியை அறிந்தேன்.

அம்மையாரை சென்ற 45 ஆண்டுகளுக்கு மேல் அறியும் பாக்கியம் பெற்றுள்ளளேன். அம்மையார் அவர்கள் அவரது துணைவன் மாசிலாமணியுடன் காந்தீயக் கோள்கைகளைப் பரப்புவதிலும், பெண்கள் விடுதலை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். "தமிழ் மகள்" என்னும் மாதாந்த ஏடு உயர்ந்த கருத்துக்கள் விழுமிய கட்டுரைகள், கவிதைகள், கதைகள் சிறு நாடகங்கள் முதலியவற்றுடன் நேயர்கள் நெஞ்சை மகிழ்ச்சி பொங்கச் செய்தது. ஈழத் தமிழ் மகளிர் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டது அத்தத் தமிழ்மகள் ஏடு.

அவருடைய துணைவன் உயர் திரு.பொ. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் "தேசாபிமானி" என்னும் ஒருதினசரிப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினர். அத்தினசரி முதலில் எமது தந்தையாரின் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக் கூடத்தில் இருந்து வெளிவந்தது அக் காலத்தில் வண்ணை நகரில் அமைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சங்கத்தின் தலைவராகவும் அன்னர் விளங்கினர். அதன் உப தலைவர்களாக இருந்தவர்களுள் ஒருவர், திரு. எஸ். யூ. சோமசேகரம்அவர்கள். (முன்னை நாள் மாகாண வித்தியாதிபதி, மற்றவர் தமிழர் போதினி ஆசிரியர் கு. விஜயரத்தினம்அவர்கள். இன்று "ஈழ நாடு" அதிபர் சீனிவாசன் அவர்கள் சங்கப்பத்திரிகை ஆசிரியராகவும், வைத்தீசுவர வித்தியாலய உப அதிபர் வைரமுத்து அவர்கள் (முன்னை நாளில் அப்புத்துரை) இணைப் பத்திரிகை ஆசிரியராக அடியேன் இணைக் காரியதரிசியாகவும் இருந்தோம்

திருமதி மங்களம்மாள் மாசிலாமணி அவர்களுடன் பன்முறை உரையாடியுள்ளேன். அவர் உயர்ந்த எண்ணங்களும் தூய நெஞ்சமும் உடையவர். யாழ்ப்பாண வரலாற்றை எழுதும் பொழுது அவரை 'ஈழத்து அன்னை கஸ்தூரி பாய்" எனப் போற்ற விரும்புகின்றேன்.

அம்மையார் புகழ் நீண்ட காலம் பரவுக! வாழ்க காந்தீயம்!

இங்ஙனம்,
வை. முத்துக்குமாரசாமி
கயிற்றிங்கேல் லேன்,
லண்டன், S. W. 12.

## கல்வித்தொண்டும் சமூகத்தொண்டும் புரிந்த திரு, இ. கதிரேசு ஆசிரியர்

அராலி சரஸ்வதி வித்தியாசாலையின் ஆரம்ப காலத்தில் 25 வருடங்கள் வரை தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. இ. கதிரேசு அவர்கள் தமது மனைவி, மக்கள், சுற்றமித்திரரை அந்தரிக்க விட்டுத் தமது 85 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்கள்.

ஆசிரியர் திரு: இ. கதிரேசு அவர்களும் மனைவி பொன்னுச்சி அம்மையாரும் அராலி மக்களுக்குத் தாயுந்தந்தையும் போன்றவர்கள். மக்களது அகவிருளை யோட்டி அறிவொளியைப் பரப்பிய பெருமகனாராகிய ஆசிரியப் பெருந்தகையவர்கள் ஆசிரியப் பணியுடன் அப் பாடசாலையின் முகாமைச் சபையாகிய அராலி சரஸ்வதி மகாசபையின் சமய கைங்கரியங்களிலும் பெரிதும் உழைத்தவர். அத்தோடு அராலி வடக்கில் சைவ. ஆங்கில, தமிழ் வித்தியாசாலைகளை அமைக்கப் பெரிதும் முயற்சியெடுத்துப் பயனுங் கண்டவராவார்.

கணவனும் மனைவியும் ஆசிரியர்கள். பாடசாலைக் காணியிலுள்ள வீட்டிலேயே வாழ்ந்தவர்கள். சமூக வளர்ச்சிதான் பாடசாலையின் உயிர் நாடி என்ற முறையில் பாடசாலையை நடத்தினார் திரு. இ கார்த்திகேசு அவர்கள் ஆசிரியத் தொழிலுடன்வைத்தியராகவும் சோதிடராகவும் பணி புரிந்தவர். இளைப்பாறிய காலத்தில் கிராமசபை அங்கத்தவராகக் கடமையாற்றிய சமூகத் தொண்டனுமாவார், இவர் நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர், அங்குள்ள பண்டிதர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை இளம் பராயத்திலேயே கற்றுக் கொண்ட தன்மையினாற் புராணபடனஞ் செய்வதிலுந் திறாகத் திகழ்ந்தார் இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் எல்லோரதும் பெருமதிப்புக்கிலக்கானவர்கள்.

தன்னலக்கருதாச் செம்மலாகிய இவர் ஏழைக்கிரங்குந் தன்மை, குறைவற்ற ஊக்கம். நிறைவுற்ற நோக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு முதலிய சிறந்த குணங்கள் படைத்தவர். அதனாற்றான் போலும், இளைப்பாறிய பின்னரும் பல ஆண்டுவன் பொதுச் சேவையிலீடுபட்டுப் பெரும் புகழீட்டிக் கொண்டார்.

அன்னாரது மரணச் சடங்கு வைபவத்தின் போது (9-1-71) அவரது மாணாக்கர்களும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் அவருக்குப் பின்னர் தலைமையாசிரியர்களாகக் கடமையாற்றி இளைப்பாறிய தலைமையாசிரியர்கள் திரு. மு. சதாசிவம் திரு. வி நாகலிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றித் தமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்தனர்.

திரு. இ. கதிரேசு அவர்களின் மரணத்திற்கு அநுதாபந் தெரிவிக்கும் முறையில் பாடசாலையில் மாணவர் மத்தியில் திரு க. கந்தசாமி ஆசிரியர் அவர்கள் அன்னாரது சேவையைப்பற்றிச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். ஆத்மசாந்திக்காக 2 நிமிடம் மௌனம் அநுட்டிக்கப்பட்டது,

## வரதக்ஷணையால் ...

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

செலவிட்ட பணத்தைத் தரவேண்டுமென்றும், இன்னொருவன் தன்மகனுக்குத்தான்-தான் கேட்கிற பணமென்று வெளிப்படச் சொல்லிப் பின் தன்மகனின் கலியாணத்திற்குச் செலவழிக்கிறான். வேறொருவன் தான் கடன்பட்டுக்கட்டிய வீடு இன்னும் முற்றாய் முடியவில்லை, அக்கடனும் கொடுத்து வீடும் முடித்து விட வேண்டும். அதற்கு இவ்வளவு பணம் தரவேண்டும். என்று பணத் தொகையும் சொல்லிக் கேட்கிறான். இன்னும் புத்திரர்களையும் சில புத்திரிகளையும் பெற்ற பெற்றோர்கள் தங்கள் புத்திரர்களுக்கு மாத்திரம் இவ்வளவு தொகை தரல் வேண்டுமென்று மணவாட்டியின் பெற்றோரின் நிலைபரத்தை விசாரித்து அறியாமல் (இரக்கமின்றி) கேட்கிறார்கள்.

சில அறிவு குறைந்த பெற்றோர்கள் தங்கள் மக்களுக்கு (பெண்பிள்ளைகட்கு) வயதேறி விட்டது, இனி நெடுக இப்படி வைத்திருக்க முடியாது, என்று மகனின் விவாகத்திற்குத் தங்களிடத்துள்ள பணம்-போதியளவு இல்லாதிருந்தால்—தாங்கள் அணிந்துள்ள நகைகளையும் தங்கள் பிற்காலத்திற்குத் தங்களுக்குத் தேவையான காணி முதலியவற்றை விற்றாயினும், ஈட்டிற்குக் கொடுத்தாயினும் மாப்பிளை கேட்ட தொகையைக் கொடுத்துப் பின் கஷ்டப்படுவோம் என்கிறார்கள்.

மாப்பிளை கேட்கும் பெருந்தொகைப் பணம் விவாகத்தின் பின் அப்பெண்களினதும் கணவனதும் இன்ப துன்பங்களில் அப்பெண்ணினது பெற்றோருக்கு உண்டாகும் இயலபானவும் சட்டரீதியான கடமைகளை இல்லாமற் செய்துவிடின், கொடுத்த அப் பணத்தினைக்குறித்துப் பெற்றோர்கள் அதிக கவலைப்பட மாட்டார்களாயினும், அவர்கள் தங்கள் மகள் மேல் வைத்திருக்கும் அன்பும், இரக்கமும காரணமாகத் தாங்கள் உயிரோடிருக்கும் வரையும் தங்கள் மகளுக்கும், மருமகனுக்கும்; வரும் இன்ப துன்பங்களில் பங்குபற்றாதிருக்க முடியுமா? மகள் மருமகன் ஆகிய இருவருக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் செய்ய வேண்டிய பல கிரியைகளிலும, வருத்தம் முதலிய துன்பங்களிலும் வரும் பெருஞ் செலவுகளுக்கு அவர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டுமல்லவா? சில பெற்றோர்கள் மேற்காட்டிய கிரியை முதலியவற்றில் பங்குபற்றாது வைரித்த மனமுடையவர்களாயிருப்பார்கள். ஏனெனில் முன்புதானே மாப்பிளைக்கு அவர் கேட்ட பெருந்தொகையை அள்ளிக் கொடுத்து விட்டோமே! இப்பொழுது எங்களிடத்தில் ஒன்றுமில்லை. நாங்கள் ஒன்றுஞ் செய்ய முடியாது. என்றும், சொல்கிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பெண்ணுக்கு வர தட்சணையாக மாப்பிளைக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்தாலும், அந்த மாப்பிளை அந்தப்பெண்ணை, அன்பாய் நடத்துவான் என்பதற்கு உத்தரவாதியாயிருப்பானோ?

எது விதமாகப் பார்த்தாலும் பெருந்தொகைப்பணம் வரதட்சணை கொடுத்தல் ஜன ஆசாரமல்ல. மிகவும் தீமைபயக்கும். இல்லொழுக்கத்திற்கு முழு விரோதமானது.

இந்த வரதட்சணை கொடுக்கும் வழக்கம் இந்தியாவிலிருந்து வந்தது என்று சொலலலாம். சில வளர்ந்த வாலிபர்கள் சிறு உத்தியோகத்திலிருந்து கொண்டு பெருந்தொகைப் பணத்தைப் பெற்று விவாகஞ் செய்தபின் சோம்பேறிகளாய் தாங்களிருந்த சிறு உத்தியோகத்தையும் விட்டு அப் பணத்தையே செலவழித்து கஷ்ட நிலையிலிருக்கிறார்கள்.

இந்தியாவில் ஒரு இடத்தில் ஒரு வாலிபன் தனக்குப் பேசிய பெண் அழகற்றவள் என்று கண்டு அவளை

(வளர்ச்சி 4- ஆம் பக்கம்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 945³

யாழ்ப்பாணம் கொட்டடி சின்னையா மகள் பாக்கியலட்சிமி — வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் கொட்டடி
1. சண்முகம் கந்தையாவும்
2 பெண் நாகரத்தினமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 9453-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ஆம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மீ 22-ந் திகதி (22-2.71) திங்கட்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4900/- ம் 28-9-67 தொடக்கம் 6-5-68 வரைக்கும் ரூபா 4000- க்கு 24 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319-75 இதில் ரூபாய் 125-கொடுபட்டுள்ளது.


### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென் மேற்கு இறை "பள்ளு விலிததோட்டம்" நெ. பர 3 குளி 3½ ம் வீடும் கிணறும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு றோட்டு வடக்கும்மேற்கும் சோமசுந்தரத்தின் உரிமையாளரின் ஆதனம் தெற்கும் ஐயன் சின்னதம்பிக்கும் பெண் இளையபிள்ளைக்குமுரிய ஆதனம் பதிவு இல: D 307/283.

நீ. அன்ரனிப்பிள்ளை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
22 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

எம். 458 15-1-71

## "முன்னேற்றப் பாதையில் நம் நாடு



பக்தர்: "மகாவலி கங்கையைத் திசை திருப்புகிற திட்டம்பற்றி இப்ப ஏதோ பேச்சடிபடுகுது! என்ன நடக்குமோ தெரியாது?

சித்தர்: "ரஷ்யாவிலிருந்தும் — செக்கோஸ்லவாக்கியாவிலிருந்தும் கிடைக்கிற உதவிகளைப் பயன்படுத்த அரசாங்கம் முடிவு செயதிருக்காம்; இதுமட்டுமா ...? அரசாங்க கனரக கூட்டுத் தாபனம், உழவு இயந்திர உற்பத்தித் தொழிற்சாலைக் குரிய கட்டிடங்களை விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறதாம்; நம்ம நாடு இப்ப முன்னேற்றப் பாதையை நோக்கித் துள்ளு நடைபோடுது என்பதை மனசில் வைச்சிருங்கஅம்மான்',

"நாயன்மார் - நாதன்"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M, B. 10005

சுளிபுரம், அருணாசலம் கதிரவேலு —வழக்காளி

எதிராக

சுளிபுரம், சுப்பர் வடிவேலு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 10005ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஆண்டு பங்குனி மாதம் 1-ந் திகதி (1-3-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 1495/- ம் 27-5-68 தொடக்கம் 10-2-69 வரைக்கும் ரூபாய் 1000/- க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 228-54 சதம் தீர்வைக்குப் பின் கொடுபட்ட ரூபாய் 1000/- கழிவாக

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு டிவிசன் சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை 'குடாக்கானை' பரப்பு விலம் இலா. 2ம் பனைகளும் எல்லைகள் கிழக்கு ஒழுங்கையும் தில்லையர் பெண் தெய்வானையின் ஆதனம், வடக்கு ஐயனார் கோவிலின் ஆதனமும். கையொழுங்கையும், மேற்கு ஆறுமுகம் முருகரினுடையதும் வேலு முருகரினுடையதும் ஆதனங்கள், தெற்கு சரவணை பெண் செல்லாச்சியினுடைய ஆதனம். இதலடங்களும், ஐயனார் கோவில் ஆதனத்தில் உரிய கிணற்றில் 1/3 பங்கும். வழிவாய்க்கால் பாவிப்புருத்தும், தண்ணீர் வாய்க்கால் உரிமையும் கிணற்றில் தூர்வைப் பங்கும். பதிவு இலக்கம் யாழ்ப்பாணம் E, 214/3

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
6—1—71

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

எம். 455 15-1-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: M, B. 6592

வைத்திலிங்கம் கந்தையா, உரும்பிராய், —வழக்காளி

எதிராக

1 சிவக்கொழுந்து இராஜேந்திரம் அவரது
2 மனைவி பாக்கியம் இருவரும், சண்டிக்குளி, —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 6592 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும துண்டுக்காணி 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி (15-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 17772-20க்கு 23-4-64 தொடக்கம் 7-6-66 வரைக்கும் ரூபா 14000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு 433-02 இதில் கழிவு ரூபா 300/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சண்டிக்குளி கோவிற்பற்று சண்டிக்குளி இறை "காளவாயடியும் காளவாயடிக் குளமும்" 1952ம் ஆண்டு சித்திரை மீ 25ம் உ உத்தரவுபெற்ற உலாந்தா J. மனுவெலால் 509A ம் இலக்கத்தில் வரையப்பட்ட படத்தின் 2ம் இலக்கத் துண்டு நெ பர. 10 குளி 11, 6/10 இதில் கிழக்குப் புறமாக நெ. பர. 6. இதற்குள்ளிருக்கும் கல் வீடுகளும் கிணறும் பயிர் வகைகளும் இந்த நெற்ப பரப்பு ஆறுக்கும் எல்லை கிழக்கு றோட்டு வடக்கு வயித்திலிங்கம் ஆறுமுகத்துக்கும் பெண் தங்கரத்தினத்துக்குமுரிய ஆதனம் மேற்கு இதன் மிகுதிப் பாகம் தெற்கு முடிக்குரி ஆதனம், இதன் தெற்கெல்லைக் கருகால் மிகுதிப் பாகத்துக்குப் போகும் பத்தடி அகலங் கொண்ட ஒழுங்கைப் பாவிப்புரித்தும் புற நீங்கலாக மிகுதி யடங்கலுமதைச் சேர்ந்தவைகளும் குறித்த நெ. பர. 10 யாழ்ப்பாணம் D 217/785ம் இலக்கப் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது. குறித்த குளி 11, 6/10 யாழ்ப்பாணம் D 266/145ம் இலக்கப் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்,

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 31-12-70

எம். 462 15.1-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 10,95

ஒரு பகுதி:
1. தம்பு சிவ சுப்பிர மணியமும்
2. பெண் தங்கரத்தினமும் —வழக்காளிகள்

எதிராக

கொடிகாமம், வெள்ளம் போக்கட்டை. கந்தர் வேலுப்பிள்ளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10195 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு மாசி மீ 26 ம் திகதி (26—2—71) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 3790/- ம் 6—8—68 தொடக்கம் 25—4—69 வரைக்கும் ரூபாய் 2000/- க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 265/39.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவிற்பற்று கச்சாய் இறை "விடல் தல் காடு" நில. பர. 21 எல்லை கிழக்கு— பாலாவிக் கிராம ஊரெல்லை வடக்கு புதிதாக அமைக்கப்பட்ட ஒழுங்கை. மேற்கு— கந்தர் வாரித் தம்பிக்கும் மக்களுக்குமுரிய ஆதனம். தெற்கு— கந்தர் வாரித் தம்பிக்கும் சின்னத்தம்பி செல்லையா கைம்பெண் நாச்சிப்பிள்ளைக்கும் மருபேருக்குமுரிய ஆதனம், பதிவு இல: F. 336/168.

நீ. அன்ரனிப்பிள்ளை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும
Commissioner, Valuer,
22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

எம். 460 15-1-71

## வரதக்ஷிணையால்...

(3- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

விவாகஞ் செய்ய மறுத்து விட்டான். பின் ஒருலட்சம் வர தட்சிணை பெண்ணின் தகப்பன் கொடுக்க அவன் அதிக மகிழ்வுடன் அவளை மணஞ்செய்து கொண்டான்.

பெரும் பான்மை வறிய பெற்றோரின் பெண்கள் பொருள் கொடுத்து விவாகஞ் செய்ய இயலாத படியால், பிரமசாரிணிகளாயிருந்து தெய்வ வழிபாடு தினமுஞ் செய்து தங்களுக்குத் தெரிந்த ஒரு தொழிலைச் செய்து வாழ்வதுவே உசிதம். ——

## நீர்வேலி நாகதம்பிரான்கோயில்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் ஈசான மூலையில் தான்தோன்றிய கடம்பன் நீழ் கோவில் கொண்டிருக்கும் நாகதம்பிரான் மூர்த்திக்கு நேற்று தைப்பொங்கலை முன்னிட்டு விசேஷ அபிஷேகங்களும் பொங்கலும் ஆராதனைகளும் மாலை 4மணி முதல் நடை பெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 8932
1. குமாரவேலு கந்தையா
2. பெண் சுந்தரம் இருவரும் காரைநகர் கிழக்கு, காரைநகர் —வழக்காளிகள்

எதிராக

1. முருகேசு சிவபாதசுந்தரம் காரைநகர்
2. இராமலிங்கம் மகள் பரமேஸ்வரி
3. இராமலிங்கம் மகள் மகேஸ்வரி இருவரும் வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B- 8932 ஆம் இலக்க வழக்கின்படி எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஞூ மாசி மாதம் 6-ஆம் திகதி (6–2–71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபாய் 46,200/- இதில் ரூபா 40,000/-க்கு 15 - 3 - 1967 தொடக்கம் 27-1-1970 வரை 8,1/2 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 797-69 சதம் இதில் ரூபா 40,000/- 6-8-1969 ல் இறுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை "தாண்டிக் குளம் கரை, ஐந்துவான்வயல், வரம்பும் கட்டையடி திடலும், ஐநாததுவான் தலைமடையும். ஐநாததுவான் பதியும், ஐநாத்துவானூர், மறுபிரிவுகளும்" கெற்பரப்பு 1 குளி 3.1/2 யும், இட்டிக்கிக் கட்டடமும், குசினியும், கக்கூசும், கிணறும், மேற்கெல்லை மதிலில் அரைவாசியும், தெற்கேயிருக்கும் ஒழுங்கையில் பங்கும் பாவிப்புரித்தும், உத்தரவு பெற்ற உலாந்தா J. D. வீரசிங்கத்தால் 6-8.1941 திகதியில் 1691-ம் இலக்கத்தில் முடிந்த படத்திற் காட்டியிருப்பதுமான இந்த கெற் பரப்பு ஒன்று குளி மூன்றரைகளும் எல்லை கிழக்கு- குமாரவேலு சங்கரப்பிள்ளையின் ஆதனமும் வடக்கு- ஆஸ்பத்திரி ரோட்டு மேற்கு- ஆறுமுகம் கதிரவேலு பெண் பாறுபதிப் பிள்ளையின் ஆதனமும், தெற்கு-ஒழுங்கை. வரி இலக்கம் 218/1. இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும் ஏலவிற்பனையாளரும்
சித்தன்கேணி, 30–12–70,
எம் 457 15-1-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1 கோப்பாய் வடக்கு, கோப்பாய் வல்லிபுரம் சதாசிவம்
2 ஷை யூர் பொன்னம்பலம் (சம்புநாதன் —வழக்காளிகள்

வழ. இல: M. B. 10581 எதிராக

1 மாகவன் நீர்வேலி, முருகேசர் நாகமுத்து
2 ஷை யூர் பெண் சின்னம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10581ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டு காணிகளை 1971-ம் ஞூ மாசிமீ 10-ம் திகதி (10-2-71) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5280-00ம் ரூபாய் 4000/-க்கு 3-2-1969 தொடக்கம் 29-9-1969 வரைக்கும் பத்து வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 386-05 சதம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலியிறை "சுடுகாடு கலட்டி" பர. நி இல. இருபத்துநாலரை (பர. நி. இல. 24½ எல்லை கிழக்கு கதிரைவேல் பெண் சின்னப்பிள்ளைக்கும் மற்றும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு செல்லப்பா கனகம்பெண் வயிரவிப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு சுப்பர் பிள்ளைக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குரிய வைகளும். இதன்பதிவு K 2.8/188

2. ஷை இறை "வாமுதலைப்பலட்டி" பர. நி. இல. ஐம்பது (பர. நி. இல. 50) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு வல்லிபுரம் கந்தையாவிற்குரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும் பெண் செல்லத்திற்குமுரிய ஆதனம், மேற்கு வயிரமுத்து வேலுப்பிள்ளைக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி வைத்திலிங்கத்திற்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குரியவைகளும் இதன் பதிவு K. 254/51

வை. ஏரம்பமூர்த்தி
காரைநகர். 1970-ம் ஞூ மார்கழிமீ 29-ம் திகதி கொமிஷனரும்
எம். 461 15-1-71, விலைமதிப்பாளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. மயில்வாகனம் இராசையாவும்
2. மனைவி சின்னதங்கச்சி இருவருடைய விலாசம் வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

வழ: இல. M B 6047 எதிராக

1. முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலுவும்
2. மனைவி சிவபோகம் இருவருடைய விலாசம் நாவலர் வீதி வண்ணார்பண்ணை கிழக்கு
3. மனேஜர் மேர்க்கண்டையல் வங்கி, 436, கோட்டை, [கொழும்பு.
4. சுப்பிரமணியம் பொன்னம்பலம், காரைநகர் மேற்கு காரைநகர்.
5. தல்லதம்பி செல்வநாயகம், காரியதரிசி, டிஸ்திறிக் கோட்டு, யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6047 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு மாசிமீ 20-ம் திகதி (20–2–71) சனிக்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 21356–25ம் 19–2–63 தொடக்கம் 22–12–64 வரைக்கும் ரூபாய் 17000/–க்கு 15 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 504–41

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணையில் வண்ணார்பண்ணை கிழக்கு கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை "மாவடி இலகடியும் சம்புநாதன் தறையும்" நி. பர. 3 குளி 16 1/8ம் கல் வீடும், குசினியும் மற்றும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு செல்லம் துரையம்மாவினுதனம், வடக்கு ரோட்டு மேற்கு முருகர் நாகலிங்கத்தின் ஆதனம், தெற்கு முருகன் இராமநாதியினுதனம் மேற்கெல்லைக் காணியின் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் நொத்தாரிஸ் எஸ். கே. ஏபிரகாம் அவர்களால் 8103ம் இலக்கத்தில் 15–11–1915ல் எலிசபெத் நேசம்மாவின் பெயரில் எழுதப்பட்ட சீதன உறுதியோடு அணைக்கப்பட்டிருக்கும் படத்தில் 'A' துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் 1, 3/8 குளி விசாலமுள்ள வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இக்காணி D 287/265ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

14, டேவிற் வீதி, அ. போ. எதிர்மனசிங்கி
யாழ்ப்பாணம், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
7–1–71 எம் 456 15—1—71.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10869
சுப்பிரமணியம் மகன் ஈஸ்வரி கௌரி உருக்பிராய் [வழக்காளி

எதிராக

1. சபாரத்தினம் விவேகானந்த ராசாவும் பெண்
2. இராசேஸ்வரியும், சுரந்தன் நீர்வேலி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B/ 10869-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971-ஆம் ஞூ மாசி மாதம் 13-ம் திகதி (13-2–71) சனிக்கிழமை முற்பகல் 11–00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 9157–75 ம் 5-6-69 தொடக்கம் 26-2-70 வரைக்கும் ரூபாய் 6500/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 382-20 ம்

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவில் பற்று நீர்வேலி இறை உள்ள காணி மிட்ட கேணி என்னும் T. தர்ப்பு உலாந்தாவின் 24-6-63 ம் திகதியில் இடப்பட்ட 1479 ம் இலக்க பிளானில் இரண்டாம் துண்டாகிய 14 நிலப்பரப்பும் 11/17 குளியும் இதில் அடங்கியவைகளும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு தேவசகாயநாதன் ஆதனம மேற்கு முத்துத் தம்பி தேவராசாவுக்கும் பெண் மாறுவதிப் பிள்ளைக்கும் உரிய முதலாம் துண்டு ஆதனம் தெற்கு ஊரெழு நீர்வேலி ரோட்டு இது அடங்கலிலும் சொரியலாக அரைப்பங்கு ஆதனம்.

2. மேற்காட்டியபடி வலிகாமம் கிழக்கு பகுதி புத்தூர் கேவிற்பற்று அசசெரு இறை உள்ள திப்பிலப்புலம் என்னும் 40 நிலப்பரப்பு இதில் தென்கிழக்கு பக்கமாக நடுகேகொள்ள ஒரு தென்னை மாத்துடன் 3. 1/4 பரப்பு நிலம் இம் 3. 1/4 பரப்பு நிலம இம 3, 1/4 பரப்புக்குமு எல்லைகள் கிழக்கு நாகமுனை ஒழுங்கை வடக்கு கிணற்றுக்குப் போகும் வழிவாய்க்கால் மற்று கதிரவேலு சிவபாத லிங்கம் பெண் பதுமலோசனியின் ஆதனம். தெற்கு ரோட்டு இது அடங்கலிலும் சொரியலாக அரைப்பங்கும் சம்பந்தப்பட்ட கிணற்றில் தண்ணீர் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்
தொல்புரம். 5-1-71.
M 464 15—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுண்டிக்குளி 1 மயில்வாகனம் தனராஜாவும்
2 பெண் வெஞானம்மணியும்

இல: M B, 9226 எதிராக —வழக்காளிகள்
சுண்டிக்குளி இமேசன் சாமுவேல் நவரட்னராஜா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B 9226 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2துண்டுக்காணிகளை 1971-ம் ஞூ மாசிமீ 19ம்திகதி (19-2-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3550/-ம் 18-7-67 தொடக்கம் 11-7-69 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 308-36

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "சக்சங் காட்டு வயல்" உத்தரவு பெற்ற உலாந்தா S. ஏகாம்பரம் தயாரித்த 25-5-1923 திகதி கொண்ட படத்தின்படி கெ. பர. 9 குளி 4½ எல்லை கிழக்கு காலஞ்சென்ற சின்னக்குட்டி சுப்பரின் உரிமையாளரின் ஆதனம், வடக்கும மேற்கும் காலஞ்சென்ற கதிரேசு வல்லிபுரத்தின் உரிமையாளரின் ஆதனம், தெற்கு றெயில் ரோட்டு பதிவு இலக்கம் D. 271/64

2. ஷை சிவியாதெரு இறை 'கொற்றைபறுகுவயல்' கெ. பர. 39½ ஆறுல் உத்தரவுபெற்ற உலாந்தா S. ஏகாம்பரம் தயாரித்த 25-5-1923 திகதி கொண்ட படத்தில் 1ம், 2ம், 3ம் துண்டுகளாகக் காட்டப்பட்டிருக்கும் கெ. பர. 41 குளி 4/16 எல்லை கிழக்கு காலஞ்சென்ற கதிரேசு வல்லிபுரத்தின் உரிமையாளருக்கும் சங்கரப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்குமுரிய காணி வடக்கு காலஞ்சென்ற கதிரேசு வல்லிபுரத்தின் உரிமையாளருக்கும் சங்கரப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்கும் செல்விநாதர் கைபெண் உமயவல்லிக்குமுரிய காணகள் மேற்கு நாகநாதர் கைம்பெண் தங்கமுத்துவின் காணி தெற்கு காலஞ்சென்ற சுப்பர் சின்னத்தம்பியின் உரிமைக்காரருக்கும் நமசிவாயம் சுப்பிரமணியத்துக்குமுரிய காணகள். பதிவு இல: D 271/65

நீ. அன்ரனிப்பிள்ளை
22. கோவில் வீதி கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். எம் 459 15—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வேலுப்பிள்ளை சேதுநாதன், வட்டுக்கோட்டை கிழக்கு. —வழக்காளி

இல: M B 10820 எதிராக

பரமசிவம்பிள்ளை ராசநாயகம், சுளிபுரம் (தனக்காகவும், காலஞ்சென்ற மாரிமுத்து பரமசிவம்பிள்ளையினதும் பெண் செல்வரத்தினம்மாவினதும் ஆதனத்தின் சட்டரீதியான பிரதிநிதியாகவும் —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B / 10820 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி கீழேவிபரிக்கப் படும் ஆதனம் 1971 ம் ஆண்டு பங்குனிமாதம் 1 ம் திகதி (1-3-71) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவ்வாதனத்துக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதலும் வட்டியுமாக ரூபா 4 925/- இன்னும் 3500/-ரூபாவிற்கு 18-5-1969 தொடக்கம் 5.7-70 வரைக்கும் 18 % வட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5% வடியும் கோட்டுச் செலவு ரூபா 574/20 சதமும்.

ஆதன விபரம்

ஊவாமாகாணம், பதுளைமாவட்டம், உடுக்கிந்தப் பகுதி' மகாபலாத்தகோறளை' பண்டாரவளைப் பட்டணம் ''பனசல்வத்தை அல்லது டற்சகேதறவத்தை" விசாலம் 5 பேச்சு எல்லை கிழக்கு செல்லத்துரை மயில்வாகனத்தினுதனம், வடக்கு மாரிமுத்து சிவப்பிரகாசத்தினுதனம், மேற்கு D. A அபயசேகராவினுதனம் தெற்கு ரோட்டு. பதுளைக் காணிக் கந்தோரில் பதிவு இல J. 11/157. இது முழுவதும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
"அலைகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1. யாழ்வீதி. யாழ்ப்பாணம். M 463 15-1-71,
10-1-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 15—1—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்